உ



ஓம் குஹாயநம:

# திருப்புகழமிர்தம்

"துருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்''

மலர் 18 | விஜய ஆண்டு ஆடித் திங்கள் ஜூலை-1953 | இதழ் 4

## திருப்புகழ்

### பொது

குகையில்நவ நாதருஞ் சிறந்த
முகைவனச சாதனுந் தயங்கு
குணமுமகு ரேசருந் தரங்க முரல்வேதக்-
குரகதபு ராரியும் ப்ரசண்ட
மரகதமு ராரியுஞ் செயங்கொள்
குலிசகைவ லாரியுங் கொடுங்க ணறநாலும்;

அகலிய புராணமும் ப்ரபஞ்ச
சகலகலை நூல்களும் பரந்த
அருமறைய நேகமுங் குவிந்தும் அறியாத-
அறிவுமறி யாமையுங் கடந்த
அறிவு திரு மேனியென் றுணர்ந்துன்
அருணசர ணாரவிந் தமென்று அடைவேனோ;

பகைகொள்துரி யோதனன் பிறந்து
படைபொருத பாரதந் தெரிந்து
பரியதொரு கோடுகொண் டுசண்ட வரைமீதே-
பழுதறவி யாசனன் றியம்ப
எழுதியவி நாயகன் சிவந்த
பவளமத யானைபின் புவந்த முருகோனே;

மிகுதமர சாகரங் கலங்க
எழுசிகர பூதரங் குலுங்க
விபரிதநி சாசரன் தியங்க அமராடி-
விபுதர் குல வேழமங் கைதுங்க
பரிமளப டீரகும் பவிம்ப
ம்ருகமதப யோதரம் புணர்ந்த பெருமாளே.

## பதவுரை

பகைகொள் துரியோதனன் பிறந்து – பிறவியிலே பகைகொண்ட துரியோதனன் (மண்ணிற்குச் சுமையாகப்) பிறந்து, படைபொருத – ஆயுதங்களுடன் போர்புரிந்த வரலாறாகிய, பாரதம் தெரிந்து–பாரதம் என்ற காவியத்தை யோகக்காட்சியால் உணர்ந்து, பழுது அற - உலகிலே உள்ள குற்றங்கள் நீங்கும் பொருட்டு, வியாசன் அன்று இயம்ப-வேதவியாசர் அந்நாளில் கூறுதலும், அண்ட வரைமீதே – பெரிய மேருமலையின் மீது, பரியது ஒரு கோடு கொண்டு எழுதிய- பாரமான ஒப்பற்ற கொம்பினைக் கொண்டு நன்கு எழுதியருளிய, விநாயகன் – தனக்குமேல் தலைவனில்லாதவரும், சிவந்த பவள – சிவந்த பவளம் போன்ற நிறமுடையவரும், மதயானை – மதங்களைப் பொழியும் யானை முக முடையவருமாகிய பிள்ளையாரின், பின்புவந்த முருகோனே - தம்பியாராக அவதரித்த முருகக்கடவுளே! மிகு தமர சாகரங் கலங்க– மிகுந்த ஒலியுடன் கூடிய சமுத்திரங் கலங்கவும், எழுசிகர பூதரம் குலுங்க-கொடுமுடிகளையுடைய ஏழுகுல மலைகள் குலுங்கவும், விபரித நிசாசரன் தியங்க – மாறுபட்ட புத்தியை யுடைய சூரபன்மன் மயங்கவும், அமர் ஆடி - போர் செய்து, விபுதர் குல வேழமங்கை – தேவ குலத்திலே வந்து தோன்றிய தெய்வயானையம்மையாருடைய, துங்க பரிமள படீர – தூய மணம் வீசும் சந்தனத்தை யணிந்து, கும்ப விம்ப – குடம்போன்ற வடிவுடன், ம்ருகமத – கஸ்தூரி தரித்து விளங்கும், பயோதரம் புணர்ந்த - தனபாரங்களை மருவிய, பெருமாளே – பெருமையிற் சிறந்தவரே! குகையில் நவ நாதரும் – குகைகளில் இருந்து தவமியற்றும் ஒன்பது நாதர்களும், சிறந்த முநை வனச சாதனும் - உயர்ந்த மலராகிய தாமரையிற் பிறந்த பிரமதேவனும், தயங்கு குணமும் – தெளிந்துள்ள முக் குணங்களும், அசுர ஈசரும் - அசுரர் தலைவர்களும், தரங்க முரல் வேத துரகத புராரியும் – கடல் அலைபோல் முழங்குகின்ற வேதங்களைப் புரவியாகக்கொண்டு முப்புரத்தை யெரித்த உருத்திர மூர்த்தியும், ப்ரசண்ட மரகத முராரியும், வலிமை மிக்க பச்சை நிறமுடைய திருமாலும், செயம் கொள் குலிசை வலாரியும்– வெற்றியைக் கொள்ளும் வச்சிரப்படையைக் கையில் ஏந்திய இந்திரனும், கொடும் கண் அறநூலும் - மிக்க அறிவு மயமாகிய அறநூல்களும், அகலிய புராணமும்- பரந்துள்ள புராணங்களும்,

ப்ரபஞ்ச சகலகலை நூல்களும் - விரிந்துள்ள எல்லா வகையான கலைகளும், பாந்த அருமறை அநேகமும் - எங்கும் பரவியுள்ள அரிய அநேக வேதங்களும், குவிந்தும் அறியாத - இவைகள் யாவும் ஒருங்கு திரண்டு அறிய முயன்றும் அறியப்படாத, அறிவும் - அறிவையும், அறியாமையும் கடந்த - அறியாமையையும் கடந்து அப்பாலைக்கு அப்பாலாயுள்ள, அறிவு திருமேனி என்று உணர்ந்து - அறிவே ஒரு திருமேனியாக அமைந்துளது என்பதை அனுபவத்தினால் உணர்ந்து, உன் அருண சரண அரவிந்தம் - தேவரீருடைய சிவந்த திருவடித் தாமரையை, என்று அடைவேனோ - எந்த நாள் சார்ந்து இன்புறுவேனோ?

## பொழிப்புரை

பிறவியிலேயே (பாண்டவர்கள்மீது) பகைகொண்ட துரியோதனன், புவிக்குச் சுமையாகப் பிறந்து, ஆயுதங்களுடனும் சேனைகளுடனும் போர்புரிந்த, பாரதவரலாற்றை யோகக் காட்சியால் உணர்ந்து, உலகில் உள்ள குற்றங்கள் நீங்கும் பொருட்டு, வேதவியாசர் காவியமாகப் பாடியபோது, அதனை உயர்ந்த மேருமலையின்மீது, சிறந்த ஒப்பற்ற கொம்பைக் கொண்டு எழுதியருளியவரும், சிவந்தநிற பவளம்போன்ற நிறமுடையவரும் மும்மதங்கள் பொழியும் யானை முகமுடையவருமாகிய விநாயகப் பெருமானுக்கு இளைய தம்பியாகத் திரு அவதாரஞ் செய்த முருகக் கடவுளே! மிகுந்த ஓசையுடன் கூடிய கடல் கலங்கவும்; கொடுமுடிகளையுடைய ஏழு குலமலைகளும் குலுங்கவும்; மாறுபட்ட அறிவையுடைய சூரபன்மன் மயங்கவும், போர் செய்து, தேவ குலத்திலே வந்து தோன்றிய தெய்வயானையம்மையாருடைய, தூய மணம்வீசும் சந்தனமும் கஸ்தூரியும் அணிந்து குடம்போன்ற வடிவுடையதனங்களைத் தழுவிய பெருமிதம் உடையவரே! குகையில் இருந்து இடையறாது தவம்புரியும் ஒன்பது நாதர்களும், சிறந்த மலராகிய தாமரையில் தோன்றிய பிரமதேவனும், தெளிந்த முக்குணங்களும், அசுரர் தலைவர்களும், கடல் அலைபோல் முழங்குகின்ற வேதங்களைக் குதிரையாகக் கொண்டு முப்புரங்களை எரித்த உருத்திரமூர்த்தியும், வலிமைமிக்க பச்சைநிறமுடைய திருமாலும், வெற்றிகொள்ளும் குலிசாயுதத்தைக் கையிற் பிடித்த இந்திரனும், மிக்க அறிவுமயமாய அறநூல்களும், விசாலமாகவுள்ள புராணங்களும், விரிவாகவுள்ள எல்லாக் கலைகளும, எங்கும் பரவியுள்ள வேதங்களும், ஆகிய இவைகள் ஒருங்குகூடி முயன்றும் அறிவதற்கு அரிதாகிய அறிவையும் அறியாமையையும் கடந்து, அப்பாலுள்ள அறிவே ஒரு திருமேனி என்பதனை அநுபவத்தினால் உணர்ந்து, தேவரீருடைய சிறந்த சிவந்த தாமரைபோன்ற திருவடிகளை அடியேன் எந்நாள் அடைந்து இன்புறுவேனோ?

## விரிவுரை

குகையில் நவநாதரும்:—

நவநாதர்—ஒன்பது நாதர்கள்.

இவர்கள் நாதத்தை யறிந்தவர்கள். அறிந்து அதன் மேல் நிலையைப் பெற்றவர்கள். முப்பத்தாறுவது தத்துவம் நாத தத்துவம்.

"ஆறுறையுநீத் ததன்மேல் நிலையைப்
பேறு அடியேன் பெறுமாறுளதோ?" — அநுபூதி.

"நாதமுடிமே லிருக்கும் வெண்ணிலாவே—அங்கு
நானும்வர வேண்டுகின்றேன் வெண்ணிலாவே"
— திருவருட்பா.

இவர்கள் பெரிய சித்தர்களுமாவார்கள். மிகப் பெரிய கருமங்களை எளிதிற் புரிபவர்கள். காயத்தை யழியாது கற்பங்கள் பல நிறுத்தி, தவத்தையே தனமாகக் கொண்ட தனி ஞானத் தலைவர்கள்.

இவர்களின் பெயர்கள்:

சத்தியநாதர், சதோகநாதர், ஆதிநாதர், அநாதிநாதர், வகுளிநாதர், மதங்கநாதர், மச்சேந்திரநாதர், கடேந்திரநாதர், கோரக்கநாதர்.

இவர்கள் சிவயோகத்தின் நுணுக்கந் தெரிந்த தவயோக சிலர்கள்; இவர்கள் மிகவுஞ் சிறந்தவர்களாதலின், முதற்கண் இவர்களை அடிகள் இங்கு கூறுகின்றார்.

அன்றியும் நாதர் என்ற பேர்பெற்றவர்கள் இருவர் உளர்; ஒருவர் திருமூலநாதர், ஒருவர் அருணகிரிநாதர்; இந்த இருவர்களும் நாதத்தை யறிந்தவர்கள்.

சிறந்த முகை வனச சாதனும்:—

வனசம்— தாமரை. வனம்—தண்ணீர்; ஜம்—பிறத்தல். தண்ணீரில் பிறத்தலால் தாமரை இப்பேர் பெற்றது. தாமரையில் பிறந்தவன் பிரமதேவன். சாமானிய தாமரையன்று; திருமாலுடைய நாபியினின்றும் வந்த தாமரை யாதலின் "சிறந்த முகை வனசன்" என்றனர். பிரமதேவன் சிருட்டித் தலைவன் ஆதலின் மண்ணுடன் தொடர்புடைய தாமரையைக் கோயிலாகக் கொண்டனன்.

தயங்கு குணமும்:—

தயங்குதல்— தெளிதல். கலங்கிய குணங்களும் உண்டு. இங்கே நன்கு தெளிந்துள்ள குணங்களையே கூறுகின்றனர்.

இவைகள் சத்துவம், ராஜஸம், தாமஸம்; இம்மூன்றும் ஆன்மாக்களுக்கு உள்ளவை. இவைகள் விலகவேண்டியவை.

இறைவனுடைய குணங்கள் அருட்குணங்கள். அவைகளையுடைய இறைவன் குணநிதி குணகடல் எனப்படுவான். 'குணமிலான்' என்று இறைவனைக் கூறுமிடங்களில் மேற்போந்த முக்குணமில்லாதவன் என்று பொருள் செய்துக் கொள்ளவேண்டும். குணமேயில்லாதவன் என்று எண்ணுதல் கூடாது. ஒருகுணமுமில்லையானால் அது பொருளாக இருக்க முடியாது. இறைவனுடைய அருட்குணங்கள் எட்டு. அவை; தன்வயத்தனாதல்; தூயவுடம்பினனாதல்; இயற்கையுணர்வினனாதல்; முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினின்று நீங்குத்தல்; பேரருளுடைமை; முடிவிலாற்றலுடைமை; வரம்பிலின்பமுடைமை.

அசுரேசரும்:—

அசுரர் தலைவர்கள். இவர்களில் பலர் நற்குண முடையராய், உறுதியுடையராய், மாதவஞ் செய்வதில் வல்லாராய் விளங்கினார்கள். ஆகவே இந்த வரிசையில் இவர்களும் இடம் பெற்றார்கள்.

தரங்க முரல் வேதக் குரகத புராரியும்:—

புர அரி—புராரி. முப்புரங்களை எரித்தவர். இவர் மூவரில் ஒருவராகிய உருத்திர மூர்த்தியென அறிக. பரசிவம் என்று மயங்கற்க.

தரங்கம் — அலை. முரலுதல் — ஒலித்தல்.

கடல் அலைபோல் இனிது ஒலிக்கும் வேதம்.

திரிபுரசம்மார காலத்தில் உருத்திர மூர்த்திக்கு வேதங்கள் குதிரைகளாக அமைக்கபபட்டன.

மரகத முராரியும்:—

பச்சை நிறமுடைய திருமால்.

முரன் என்ற அவுணனை வதைத்தபடியால் (முர அரி) முராரி என்று பேர் பெற்றனர்.

ஜெயங்கொள் குலிசகை வலாரியும்:—

குலிசம்—வச்ராயுதம். இது மிக்க விறலுடையது. ததீசி முனிவருடைய எலும்பினால் செய்யப்பட்டது. பல அசுரர்களை வென்றது.

வலன் என்ற அரக்கனைக் கொன்றதனால் இந்திரன் வலாரி என்று பேர் பெற்றனன்.

கொடுங்கண் அறநூலும்:—

கண்—அறிவு. கொடு என்ற சொல் மிகுதியைத் தெரிவிக்கின்றது. மிகுந்த அறிவு மயமான அற நூல்கள்.

அறம்—அறுக்கப்பட்டது. இது இது இப்படி ஒழுக வேண்டும் என்று வரையறை செய்வது.

மனுவறம் முதலியவைகள் என அறிக.

அகலிய புராணமும்:—

தருமங்களை விரிவாகக் கூறுவது புராணங்கள். வேதத்தில் நுணுக்கமாகக் கூறிய அறங்களை விரித்துக் கூறுவது புராணம் என்க. ஒரு நுண்ணிய பொருளைப் பெரிதாகக் காட்டும் பூதக்கண்ணாடி போன்றது.

இவை பதினெட்டு;

இலிங்கம், காந்தம், கூர்மம், சைவம், பிரம்மாண்டம் பௌடிகம், மச்சியம், மார்க்கண்டேயம், வராகம், வாமனம், காருடம், நாரதீயம், பாகவதம், வைணவம், பதுமம், பிரமம், ஆக்நேயம், பிரமகைவர்த்தம்.

ப்ரபஞ்ச சகலகலை நூல்களும்:—

பஞ்சம்—விரிவு. ப்ர என்ற உபசர்க்கம் மிகுதியைத் தெரிவிக்கின்றது. மிகவும் விரிந்தபடியால் உலகத்திற்குப் ப்ரபஞ்சம் என்ற பேருண்டு. சகல கலை என்பது விரிந்துள்ள அறுபத்து நான்கு கலைகள்; அவை யாவன:

அக்கரவிலக்கணம், இலிகிதம், கணிதம், வேதம், புராணம், வியாகரணம, நீதிசாத்திரம், சோதிடசாத்திரம், தருமசாத்திரம், யோக சாத்திரம், மந்திர சாத்திரம், சகுன சாத்திரம், சிற்பசாத்திரம், வைத்திய சாத்திரம், உருவ சாத்திரம், இதியாசம், காவியம், அலங்காரம், மதுரபாடனம், நாடகம், நிருத்தம், சத்தப்பிரமம், வீணை, வேணு, மிருதங்கம், தாளம், அத்திர பரிட்சை, கனக பரிட்சை, இரத பரிட்சை, கசபரிட்சை, அசுவ பரிட்சை, இரத்தின பரிட்சை, பூமி பரிட்சை, சங்கிராம விலக்கணம், மல்யுத்தம், ஆகருடணம், உச்சாடனம், வித்துவேடணம், மதனசாத்திரம், மோகனம், வசீகரணம், இரசவாதம், காந்தருவ வாதம், பைபீலவாதம், கவுத்துக வாதம், தாது வாதம், காருடம், நட்டம், முட்டி, ஆகாயப் பிரவேசம், ஆகாயகமனம், பரகாயப் பிரவேசம், அதிரிசயம், இந்திரசாலம், மகேந்திரசாலம், அக்னித்தம்பம, சலத்தம்பம், வாயுத்தம்பம், திட்டித்தம்பம், வாக்குததம்பம், சுக்கிலத்தம்பம், கனனத்தம்பம், கட்கத்தம்பம், அவத்தைப் பிரயோகம்.

அருமறை யநேகமும்:—

மறை — வேதம் உண்மையை வெளிப்படையாக உரையாமையால் மறையெனப்பட்டது. பல உண்மைகள் இலைமறை காய்போல இதில் மறைந்துள்ளன. மறை இறைவாக்கு. "சொற்றமிழ் பாடுகென்றார் தூமறை பாடும் வாயார்" என்ற சேக்கிழார் பெருமான் திருவாக்கினாலும், "பேசுவதும் திருவாயால் மறை போலுங் காணேடீ" என்ற மணிவாசகர் மணிமொழியாலும் அறிக.

மறைகள் ஆயிரக்கணக்காக விரிந்திருந்தது. "மறையாயிரங்களும்" என்கின்றார் அருணகிரியார். "ஆயிரம் ஆரணம்" என்கின்றார் அப்பர்.

அவைகளைச் சுருக்கி நான்காக அமைத்தனர் வியாத முனிவர்.

குவிந்தும் அறியாத அறிவும் அறியாமையுங் கடந்த அறிவு திருமேனி:-

மேற்கூறிய மும்மூர்த்திகளும் வேதம் முதலிய நூல்களும் ஒன்றுகூடி முயன்றும் அறியமாட்டாத அறிவு ஒன்றுளது. அந்த அறிவையும் கடந்து அப்பால் சென்றால் அங்கே ஒரு அறியாமையுளது. அதனையுங் கடந்த இடத்தில் விளங்கும் அறிவே இறைவனுக்குத் திருமேனியாக விளங்குகின்றது.

"அறிவொன்றற நின்றறிவாரறிவில்
பிறிவொன்றற நின்ற பிரானலையோ" — அநுபூதி

கலையறிவுகட்கும் அப்பாலுள்ள நுண்ணறிவுக்கும் அப்பாற்பட்ட மூல இருளுக்கும் அப்பாற்பட்டுள்ள அறிவு அது. அது இத்தன்மைத்தென்று எவரால் இயம்புதல் முடியும்?

"அவ்வாறறிவா ரறிகின்ற தலால்
எவ்வாறொருவர்க் கிசைவிப்பதுவே"

என்கின்றார் அருணகிரிநாதர்.

மிகப் பெரிய அநுபவத்தால் அறிகின்றது. அதனை நம் போன்றார் எழுதவோ கூறவோ நினைக்கவோ முடியாது என உணர்க.

பலகாலுஞ் செய்த மாதவப்பயனால் அவனருளே கண்ணாகக் கொண்டு காண்கின்றபோது அந்த அறிவு, அறிவுக்கறிவாக புலப்படும். அதனை யறிவதுவே மேலான இன்பம்.

"அறிவை யறிபவ ரறியும் இன்பம்" —திருப்புகழ்.

அதனை இறைவனிடமே வேண்டிப் பெறுதல் வேண்டும்.

"அறிவுளறியும் அறிவூற அருள்வாயே" — திருப்புகழ்.

இறைவனுடைய திருமேனி நமது உடம்பு போன்ற தென்று மயங்கித்திரிபவர் பலர்; வாய்க்கு வந்தவாறு பிதற்று வர் பலர். நமது உடம்பு எலும்பு நரம்பு உதிரம் முதலிய ஏழு தாதுக்களால் ஆயது. இறைவனுடைய உருவம் இத்தன்மைய தன்று. அது அறிவுமயமானது. அந்த அறிவும் நமக்குள்ள உலக அறிவு, கலையறிவு, வேறுள்ள ஆராய்ச்சியறிவுகளன்று.

அந்த அறிவின் இலக்கணத்தைத் தான் இந்தத் திருப் புகழில் பதின்மூன்று வரிகளால் மிக விரிவாக அடிகளார் எடுத்து நமக்கு அறிவித்தருளினர்.

ஆ! ஆ! இதனை நினைக்குந்தோறும் நெஞ்சம் விம்முகின்றது. உள்ளங் குழைகின்றது. இறைவனுடைய தன்மையை இங்ஙனம் இனிது எடுத்து நமக்கு உணர்த்தும் இப்பாடல் மிகவும் போற்றுதற்குரியது.

சிங்கமுகன் கூறுகின்றான்.

ஞானந் தானுரு வாகிய நாயக னியல்பை
யானு நீயுமா யிசைத்து மென்றால் அஃதெளிதோ
மோனந் தீர்கிலா முனிவருந் தேற்றிலர் முழுதுந்
தானுங் காண்கிலன் இன்னமுந் தன்பெருந் தலைமை.

முருகவேளை வழிபடுவது எற்றுக்கு? எனின், அறிவு திரு மேனியாகக் கொண்ட பரம்பொருளை வழிபடுவதனால் அறிவு நலத்தை நாம் பெற்று உய்யலாம் என உணர்க.

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"

என்ற பொய்யாமொழிப்படி அறிவு எல்லா நலன்களையும் எளிதிற்றரும். அறிவு நிரம்பப் பெற்றவன் அஞ்சாமையையும் அமைதியையும் பெறுவன். பின்னே வருவதை முன்னே யறிவான். ஆகவே அறிவு நமக்கு இன்றியமையாத சிறந்த செல்வம்.

அறிவு திருமேனியாகவுடைய அறுமுகப் பெருமான் அடி மலரைச் சிந்தித்து வாழ்த்தி வந்திப்போர், அறிவு நலத்தையும், அதனல் ஏனைய நலங்களையும் எளிதிற் பெற்று இன்புறுவார் என்பது உறுதி.

பகைகோள் துரியோதனன்:—

துரியோதனன் பிறப்பிலேயே பாண்டவர்கள்மீது பகை கொண்டனன். காரணம் கலியம்சமாகப் பிறந்தானுதலின்.

அழுக்காறும் வஞ்சனையும் பொய்மையும் கொண்டு, தீயவர் களோடு நட்புகொண்டு, தூயவர்களுக்கு எந்நாளும் தீமையே புரிந்து உலகிற்குக் கேடு புரிந்தான்.

பாரதந் தெரிந்து:—

வியாசமுனிவர் இமையமலையிலே மூன்று ஆண்டுகள் யோகஞ் செய்து, ஒருமைப்பட்ட சிந்தையினால் உண்டாகிய உணர்வு விழியினால் பாரத வரலாற்றை உள்ளவாறு தெரிந்தார். அதனைப் பின்னர் அவர் கவிகளாகப் பாடவுன்னினார்.

பழுதற வியாசனன் றியம்ப:—

பாரதத்திற்கும் அறம் என்று ஒரு பேருண்டு. அதன்கண் பேசப்படாத அறங்களே இல்லை. எல்லா அறங்களையும் பாரதம் வகுத்தும் தொகுத்தும் கூறும். அதனால்தான் அதனை வியாசர் பாடி விநாயகரைக் கொண்டு மேருமலையில் எழுதுவித்தார்.

சாமானியமான தாயாதிகள் கலகமான ஒரு கதையாக அது இருக்குமாயின் விநாயகர் அதை எழுதமாட்டார். வேறு நூல்களில் காணப்படாத சில அரிய பெரிய நுணுக்கமான நீதி நெறிகள் இதன்கண் இருப்பதனால் இதனைப் படித்துப் பாருளோர் உய்வு பெறவேண்டுமென்ற கருத்தே வியாசர் மேற்கொண்டார் என்பதை நாம் அறியும் பொருட்டு "பழுதற" என்ற சொல்லை இங்கு அடிகளார் பெய்தனர்.

பரியதோரு கோடு கொண்டு சண்ட வரைமீதே எழுதிய விநாயகன்:-

வியாசர் பாரதத்தைப் பாடத் தொடங்கும்போது அதனை எழுதவல்லவர் ஐந்துகரப் பண்டிதராகிய விநாயகர் ஒருவரே எனக் கருதினார். விநாயகரை வேண்டி வழிபட்டார். பிள்ளையார் அவருக்கு முன் தோன்றியருளினார்.

"அப்பனே! அடியேன் பாடும் பாரதத்தை மேருமலையில் எழுதியருளவேண்டும்"

"அன்பனே! நூதனமாகப் பாடப்போகின்றாய். தாமதமாகப் பாடுதல் கூடாது; நான் எழுதும் வேகத்திற்குத் தக்கபடி கூறவேண்டும்"

"அண்ணலே! அவ்வண்ணமே யாகட்டும். ஆனால் அடியேன் பாடும் கவிகளின் பொருளை யறிந்து எழுதவேண்டும்"

விநாயகர் அதற்கு உடன்பட்டு எழுதத் தொடங்கினார். தமது திருக்கரத்திலுள்ள ஞானமாகிய கொம்பினால் எழுதுகின்றார். இடையிடை மிகக் கடின பதங்கள் அமைந்த கவிகளைப் பாடி அதன் பொருளை விநாயகர் சிறிது சிந்திக்கும் நேரத்தில் பல ஆயிரங் கவிகளை மனதிற் பாடிக் கொண்டு, அவர் எழுதுகின்ற விரைவுக்குத் தக்கபடி வியாசர் கூறினார்.

இவ்வாறு வியாசர் கூற விநாயகர் மேருமலையில் அப்பெருங் காவியத்தை எழுதியருளினார். இதனைப் பிற திருப்புகழ்களிலும் ஆசிரியர் குறிப்பிட்டிருக்கின்றார்.

.....................“ஒரு கொம்பினாலே
எழுதென மொழியப் பண்டு பாரதம்
வடகன சிகரச் செம்பொன் மேருவில்
எழுதிய பவளக் குன்று”

“பாரதத்தை மேரு வெளீ வெளீ திகழ்
கோடொடித்த நாளில் வரைவரைபவர்
பானிறக் கணேசர் குவாகுவாகனர் இளையோனே”

.......அமராடி விபுதர் குல வேழமங்கை..........பயோதரம்
புணர்ந்த பெருமாளே:--

முருகப் பெருமான் தேவசேனாபதியாகி, சூராதியவுணருடன் போர் புரிந்து அவர்களை வென்று, இந்திரனுக்குப் புதல்வியாக வந்த தெய்வயானையம்மையாரை மணந்தருளினார்.

தெய்வயானை யென்பது கிரியாசக்தி; அது சமதமாதி குணங்களின் பொருட்டு, மும்மலங்களாகிய அசுரர்களை அழித்ததற்கு அடையாளமாகி நிற்பது.

## கருத்துரை

விநாயகப்பெருமான் தம்பியே! தேவயானையின் கணவரே! அறிவும் அறியாமையுங் கடந்த அறிவு திருமேனியாக வுடைய உமது ஞானக்கழலைச் சார்ந்து இன்புற அருள்புரிவீர்.

---

## அநுபவமுறை

**துளசி:** துளசியிலைச்சாற்றை நாள்தோறும் அருந்திவந்தாலும், அந்த இலையைக் கற்பமுறையாகப் புசித்துவந்தாலும் அதன் வேரையாவது சாற்றையாவது, எண்ணெயுடன்கூட்டிக்காய்ச்சி தலையில்தேய்த்து முழுகிவந்தாலும், அத் துளசியிலையின் சாற்றை சர்பத்தாகச் செய்து உண்டு வந்தாலும் பித்தநோய்களும் சிலேத்தும நோய்களும் நீங்கும்.

**வில்வம்:** வில்வமரத்தின் வேர், இலை, காய், கனி முதலிய வற்றைத் தனித்தனியே முறையாகத் தைலமாகவும், கஷாயம், ஊறுகாய், சர்பத் முதலிய பாகங்களாகவும் செய்து உபயோகித்துவந்தால், மேகச்சூடு முதலிய நோய்கள் நீங்கும். உடம்புக்குக் குளிர்ச்சியுண்டாகும். நன்மையுண்டாகும்.

95

உ

திருச்சிற்றம்பலம்

# பெரிய புராணம்

## சிறுத்தொண்ட நாயனார் புராணம்

(கூகூ-ம் பக்கத் தொடர்ச்சி)

### விளக்கம்

திருவெண்காட்டு நங்கையார்:—

இவர் கணவனாரைக் கடவுளாகக் கருதி அவர் கருத்தறிந்து, குறிப்புணர்ந்து, மனமொத்து வாழ்ந்தனர். இவருடைய பெருமை அளவிடற்கரியது. சிறுத்தொண்டருடைய வரலாற்றுக்கும் பெருமைக்கும் இவர் ஆணி வேராக நின்றவர். "மனையறத்தின் வேராகி விளங்கும் திருவெண்காட்டு நங்கை" என்று ஆசிரியர் அறிவிப்பதனால் அறிக.

இவர் கணவனாருடன் கருத்தொருமித்து, நாடோறும் ஆயிரக்கணக்காக வரும் சிவனடியார்களுக்கு மனஞ்சோராது முகம் வாடாது, இன்முகங்காட்டி, இன்னுரை கூறி நல்லமுதூட்டி, திருத்தொண்டு புரிந்து வந்தனர்.

வேதகாரண ரடியார் வேண்டிய மெய்ப்பணி செய்யத்
தீதில்குடிப் பிறந்ததிரு வெண்காட்டு நங்கையெனுங்
காதல் மனைக் கிழத்தியார் கருத்தொன்ற வரும்பெருமை
நீதிமனை யறம்புரியு நீர்மையினை நிலை நிற்பார்.

தமது திருமனைக்கு வந்த பயிரவர் "பெண்கள் தனித்துள்ள இடத்தில் நாம் புகுதோம்" என்ற சொல்லைக் கேட்ட திருவெண்காட்டு நங்கை, மனைக்கடன் பூண்டார் ஆதலின், உடனே அவருக்கு முன் வந்து,

அம்பலவ ரடியாரை அமுதுசெய்விப்பார் இற்றைக்
கெம்பெருமான் அடியாரைக் கண்டிலர்; தேடிப்போனார்
வம்பெனநீர் எழுந்தருளி வருந்திரு வேடங்கண்டால்
தம்பெரிய பேறென்றே மிகமகிழ்வர்; இனித்தாழார்.

"இப்பொழுதே வந்தணைவர் எழுந்தருளியிரும்"

என்றுகூறி அவரை வேண்டியிருக்கச் சொன்ன திறன் மிகவும் போற்றுதற்குரியது.

அன்றியும் இவர் சித்தாந்த நூல்களில் வல்லவர் என்பதை அவர் திருவாக்கு புலப்படுத்துகின்றது.

பயிரவரை நோக்கி, "நீர் எழுந்தருளிவருந் திருவேடம்" என்று குறிப்பிட்டதை உற்று நோக்குக. வேடத்தால் அவரை அடியவர் என்றுரேயன்றி ஏனைய பண்புகளால்

அடியார் என்று கூறவில்லை. சிவனடியார் வேறு பயிரவர் வேறு என்ற குறிப்பு இதைப் புலத்துகின்றது.

அன்றியும் கணவனிடத்திலும், "பாராதரிக்குந் திரு வேடத் தொருவர் வந்தபடி பகர்ந்தார்" என்றே குறிப்பிடு கின்றார்.

பயிரவர் கூறிய திறத்தைச் சிறுத்தொண்டர் கூறக் கேட்ட இவ்வரிய கற்புடை அம்மை, மகன் மீது அளவற்ற அன்புடையராயிருந்தும், கணவனார் திருத்தொண்டுக்கு இடர் வரக்கூடாது என்றும், இடர் வரின் கணவனார் இறந்துபடுவா ரென்றும், மகனிலும் மணவாளரே சிறந்தவர் என்றும் கருதி மகனை அரிந்து கறியமுது செய்ய சிறிதும் பின்னிடையாது இசைந்து, ஒன்றிய மனத்துடன் நின்றார். அச்செயலன்றோ சிறுத்தொண்டருக்கு இத்துணைப் பெருமை நல்கியது.

"பிள்ளை அரிய நான் இசையேன்" என்று இவர் கூறியிருப் பின் இச்சரிதமே பிழைபட்டுவிடும். ஆகவே இவ்வரலாற்றின் சிறப்புக்கு அம்மையின் பண்பு உயிர்நாடியனையது.

சீராளதேவர்:—

இவர் பெருமை சிறுத்தொண்டர் பெருமையினும் பன் மடங்கு உயர்ந்தது.

இவர் தோன்றும்போதே தெய்வத்தன்மையோடு தோன்றினார் என்பதை சேக்கிழார் மிகவும் கௌரவமாகக் கூறுகின்ற அழகுதான் என்னே?

"சீராளதேவர் என்னுந் திருமைந்தர் அவதரித்தார்" தேவர் என்ற சிறப்பு சிறுத்தொண்டருக்கு இல்லை. இவருக்கு உண்டு.

இவர் முந்திய பிறப்பிலே சிவயோக சித்தியெலாம் பெற்று கருவில் திருவுடையாராய் வந்து அவதரித்த பெரியார்.

பள்ளியில் வந்து தந்தையார் அழைத்தவுடன் திருவருள் வலிமையால் பயிரவராகச் சிவன் வந்ததையும், அவர் பொருட் டுத் தன்னை தாய்தந்தையர் கறியமுதாக்க இசைந்ததையும், தன்னைக் கொல்லும் பொருட்டு அழைக்கவந்ததையும் அறிந் தார். அதனாலேயே தந்தை பள்ளிக்கு வந்தவுடன் அவர் அழையாமலேயே அவருடன் சென்றார். தந்தையார் வாள் கொண்டு தலையினைச் சேதிக்கும் போதும் புன் முறுவல் பூத்து அதற்கு இசைந்திருந்தார். ஆ! ஆ! இவருடைய அன்பின் தகைமை அளவிடவல்லார் யாவர்?

இவர் சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர். ஆதலினாலன்றோ? தாதையார் வாள்கொண்டு தனது தலையைத் தடியும் போது வேதனை யுணராது இருந்தார்.

அன்றியும், திருஞானசம்பந்தர் சிவஞானப் பாலுண்டு தமது திருவாக்கினால் தனக்குவமையில்லாத சங்கரனைப் பாடும்போது ஐந்து வயதுடைய இவரைச் சிறப்பித்துப் பாடிய தனால் இவருடைய அருமையும் பெருமையும் எண்ணுதற்கு ஒண்ணுமோ? அன்றியும் சிறுத்தொண்டர் பேரைப் பின்னே வைத்து இவர் பேரை முன்னேவைத்துப் பாடிய அழகையும் உன்னுக.

"சீராளன் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
பேராளன்"
—ஞானசம்பந்தர்.

சிவபெருமான் சிறுத்தொண்டருக்குக் காட்சி தந்தபோது, இச்சிறிய பெருந்தகையார் பொருட்டு, மெய்ஞ்ஞான பண்டிதராகிய முருகவேளையும் தம்முடன் அழைத்துவந்தாரென்பதை உற்று நோக்குக. இதனால் இவருடைய உயர்வு உணரப்படுகின்றதன்றோ?

"சரவணத்துத் தனயரோடுந் தாமணைவார்"

சந்தன நங்கையார்:—

இவர் திருவெண்காட்டு நங்கையாரது தாதி. திருமனையில் திருத்தொண்டுக்கு உடன் இருந்து உதவிபுரிந்துவந்தார்.

சிறுத்தொண்டர் சீராளர் தலையினை இது அமுதுக்கு ஆகாது என்று கருதி ஒருபுறத்தில் புதைத்துவிடுமாறு இவரிடந் தந்தார்.

பின்னர் பயிரவர், "தலைக் கறியும் நாம் உண்போம்" என்றார். "என்செய்வோம்" என்று சிறுத்தொண்டர் ஏங்கினர்.

இப்படி வந்தவர் தலைக்கறியையுங் கேட்கநேரும் என்பதை முன்னரே அறிந்த சந்தனநங்கை அதனை ஒருபுறம் சமைத்து வைத்திருந்தார். சிறுத்தொண்டருடைய ஏக்கத்தைக் கண்டு, உடனே தொழுது சமைத்த தலையிறைச்சியைத் தந்து அவர் இடரை மாற்றினார். ஆகவே இவருடைய மதிநலமுடைய தொண்டு அச்சமயம் பெரிய ஆறுதலை யளித்தது. இவ்வாறு பலகாலும் நாயனருடனும் அம்மையுடனும் ஒத்து தொண்டு புரிந்ததனால் இவரும் உமையம்மையார் உயர் பதஞ் சேர்ந்தார்.

வேலைக்காரியாகிய கூனியால் தயரதன் குடும்பம் தளர்ந்தது.

வேலைக்காரியாகிய சந்தன நங்கையால் சிறுத்தொண்டர் குடும்பம் வளர்ந்தது.

கவிநயம்:—

இப்பொழுதே வந்தணைவார் எழுந்தருளியிரும் என்ன
ஒப்பில்மனை யறம்புரப்பீர் உத்தராபதி யுள்ளோம்
செப்பருஞ்சீர்ச் சிறுத்தொண்டர் தமைக்காணச் சேர்ந்தனம்யாம்
எப்பரிசும் அவரொழிய இங்கிரோம் என்றருளி.

உத்தராபதி. உத்தரம்—வடக்கு. வடதேயத்தில் இருப்போம் என்றும்; உத்தரம்—மேலிடம்; துவாதசாந்தத் தலத்தில் இருப்போம் என்றும் குறிப்பிட்ட நயத்தை யறிக.

இனி சிறுத்தொண்டர் மனையில் அமுது செய்ய வந்தோம் என்று குறிப்பிடாது 'காணவந்தோம்' என்றே குறிப்பிட்ட நயத்தையும் அறிக.

பின்னரும் இந்தக் கருத்திலேயே கவியை அமைத்திருக்கும் அருமையையறிக.

"..................நிகழுந் தவத்தீர்! உமைக்காணும்
படியால் வந்தோம் உத்தரா பதியோம் எம்மைப் பரிந்தூட்ட
முடியாது"

இது சிறுத்தொண்டர்பால் பயிரவர் கூறியது.

அம்மையார் சிறுத்தொண்டர்பால் கூறும்போது "வடதேசத்தோம் என்றார்" என்கின்றார். அங்கும் வட-என்ற சொல்லுக்கு ஆலமரம் என்ற பொருளுமுண்டு. ஆலின்கீழிருந்து நால்வர்க்குபதேசித்த நாயகன் என்று உள்ளுரையாக அமைத்த அருமையையும் அறிந்து மகிழ்க.

பயிரவர் சிறுத்தொண்டரிடம் கூறுகின்றார்.

"பரியுந் தொண்டர் மூவிருது கழித்தால் பசுவீழ்த்திடவுண்ப
துரியநாளும் அதற்கின்றால்" —பாடல் எண் 48.

மூவிருது—ஆறுமாதத்திற்கு ஒரு முறை என்பது வெளிப்படை. ஆன்மாவுக்குள்ள மூன்று விருதுகளைப் போன்ற ஆணவம் கன்மம் மாயை என்ற மும்மலங்களையும் நீக்கி, பசுபோதம் என்ற ஆன்ம அறிவு அற்ற இடத்தில் நாம் உண்பது (ஆன்ம போதத்தை) என்ற ஒரு கருத்தும் இதற்குள் அமைத்த அருமையை அன்பர்கள் நுனித்து உணர்க.

முந்நிரை: பாடல் எண் 49

முந்நிரை என்பது பசு, எருமை, ஆடு என்ற மூன்றுவித மான உயிர்கள் என்பது வெளிப்படை.

ஆன்மாக்களில் சகலர் பிரளயாகலர் விஞ்ஞானகலர் என்ற முப்பிரிவுகள் உண்டு என்ற குறிப்பும் அறிக.

தாதையரிய: பாடல் எண் 51.

உயிருள்ள ஆடு கோழிகளை "அறுக்க" என்றும், உயிரில்லாத கத்தரிக்காய் வாழைக்காய் முதலியவைகளை அரிய என்றும் கூறுவது மரபு.

அவன் தலையை அறுத்தான் என்றும், பரங்கிக்காய் அரிந்தான் என்றும் வழக்காற்றில் கூறுவதைக் காண்க.

சிவபெருமான் 'தாதையரிய' என்ற சொல்லினால், "நீ பிள்ளையையரியும்போது அப்பிள்ளைக்கு வேதனையின்றி, காய்களை யரியும்போது காய்களுக்கு வேதனை யின்மைபோல், அப்பிள்ளை முகமும் அகமும் மலர்ந்து மகிழ்ச்சியுடன் அச்செயலுக்கு உடன்படவேண்டும்" என்ற கருத்துக்கள் விளங்குகின்றன.

இக்கருத்தை யொட்டியே, "வாளால் மகவரிந்து" என்று பட்டினத்துப் பிள்ளையாரும் பகர்கின்றனர்.

சீராளர் சிவயோக முதிர்ச்சியுடையாராதலின் தாதையார் அவ்வினை செய்யும்போது உடம்பில் உணர்வு இன்றி சிவத்தை நினைத்துப் புன்முறுவலுடன் இருந்தார்.

> .........மகிழ்ந்து நகைசெய் அத்
> தனிமாமகனைத்தாதையார் கருவிகொண்டு தலையரிவார்"

என்ற அரிய சொற்றொடரால் இக் கருத்து வலியுறுமாறு கண்டு தெளிக.

மகனைக் கொன்றது கொலையாகாதோ?

"அன்புக்குஞ் சைவத்திற்குந் தொடர்பு உண்டா? உண்டானால் சிவபெருமான் பிள்ளைக் கறி கேட்கலாமா? சிறுத்தொண்டர் செய்தது கொலைத் தொழிலன்றோ? அவ்வாறு செய்தது நீதியா? அறமா? அரசியலார் இதற்கு இசைவார்களா? இப்போது நாங்கள் செய்தால் அரசாங்கந் தண்டிக்காது புண்ணியத் தொழில் என்று பொறுத்திருக்குமோ? இங்ஙனம் கொலை புரிந்தாரை அருளாளர் எனப்படுமோ?" என்று இவ்வாறெல்லாம் வினவுவோர் பலர். ஐயுறுவார் சிலர். இவைகட்குக் காரண காரியத்துடன் விடை பகர்வாம்.

அன்பு வேறு சிவம் வேறு இல்லை. அன்பே சிவம். பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடல் ஈந்த பிரானாகிய பரமசிவன் கருணைக் கடல் என்பதை முதலில் கருத்தில் இருத்திக் கொள்ளவேண்டும்.

ஆசை மூன்றிடங்களில் மிகவும் அழுத்தமாகப் பதிந்திருக்கின்றது.

(1) செல்வத்தின் மீது வைத்தல் (தனேஷணை)
(2) மனைவி மீது வைத்தல் (தாரேஷணை)
(3) புதல்வர் மீது வைத்தல் (புத்ரேஷணை)

இதனை ஈஷணாத்ரயம் என்பர் வடநூலார். இம் மூன்று ஆசைகளுமே பிறவிக்குக் காரணங்களாகின்றன.

"மாவேழ் சனனங் கெட மாயைவிடா
மூவேடணை யென்று முடிந்திடுமோ"

என்பது கந்தரநுபூதி.

இம் மூன்றில் பணத்தின் மீதுள்ள ஆசையையும் மனைவி மீதுள்ள ஆசையையும், நல்ல கல்வி கேள்விகளால் அகற்றி விடலாம். மக்கள் மீதுள்ள ஆசையை அகற்றுதல் மிகவும் அரிது.

"கடந்த ஞானிகளும் கடப்பரோ
மக்கள் மேல் காதல்"

இக்காதலை அறவே துறந்தவர் சிறுத்தொண்டர். யாராலும் அகற்ற முடியாத பிள்ளைப் பாசத்தை இவர் அகற்றினர் என்பதை உலகமறிந்து உய்யும்பொருட்டு, சிவபெருமான் பயிரவவடிவில் வந்து இவ்வாறு யாசித்தனர் என்று உணர்க. பயிரவர்கள் புலையுணவு உண்பவராதலின் அவ்வடிவில் வந்தார் என்பதையும் அறிக.

அறுபதினாயிரம் ஆண்டு அரசாண்ட தயரத மன்னன்பால் விஸ்வாமித்திர முனிவர் வந்து வேள்விக் காவல் புரிய நான்கு மைந்தர்களில் வலிமைமிக்க முதல் மகனைச் சிறிது துணையாக அனுப்புமாறு வேண்டினர். உயர்ந்த தவமுனிவர் பிறகே மகனை யனுப்புதற்கு மன்னன் மனம் மறுகி வேதனையுற்றான்.

ஒப்பற்ற ஒருமகனை அரிந்து கறி சமைத்து இடுமாறு பயிரவர் கூறக்கேட்ட சிறுத்தொண்டர் ஒரு சிறிதும் தயங்காது அப்பணியை மேற்கொண்டனர் என்றால் அவருடைய மனநிலை அடியார் பணியிலே அத்துணை ஈடுபாடுடன் இருந்தது என்பது தெற்றென விளங்கா நிற்கின்றதன்றோ?

என் செயல் என்பது இன்றி எல்லாம் ஈசன் செயல் என்ற திருவருள் நாட்டத்திலே இவர் வாழ்ந்தனர். இப்போது வினவுவோர் தன் செயலறுதவர்.

கொலை என்பது செயலிலே மட்டும் அமையாது. அதனைச் செய்வோர் மன நிலையில் அது அமைகின்றது.

கொலை சில இடத்தில் பாவமும், சில இடத்தில் புண்ணியமும், சில இடத்தில் கடமையுமாக ஆகின்றது.

ஒருவன் ஒருவனைச் சினந்து — அல்லது ஒருவனிடமுள்ள செல்வத்தைக் கவர்தற் பொருட்டு கொல்லுகின்றான்; இது கொலை. இது பாவம்.

ஒரு காட்டு வழியில் சில பெண்களை ஒருவன் கொல்ல முயல்கின்றான். அவ்வழி வந்த வீரன் ஒருவன் இடையில் புகுந்து கொல்லமுயன்றானைக் கொன்றான. இது புண்ணிய மாகும். கடமையுமாகும். ஏன்? அவன் மனத்தில் தீய எண்ண மில்லை. அப் பெண்களைக் காக்கவேண்டுமென்ற இரக்கத்தால் இது நிகழ்ந்தது.

ஒரு நீதிபதி தன் வாழ்நாளில் கொலைக் குற்றஞ் செய்த பலரை மரண தண்டனை விதித்துக் கொல்லுகின்றார். அது கொலையாகாது. அறமாகும்.

ஒரு மன்னன் தன் நாட்டை எதிர்த்து வந்த பகைவர்கள் பலர்களைக் கொல்லுகின்றான். இது கொலையன்று. கடமை யாகும்.

மருத்துவர் நோயாளியின் உடம்பில் உள்ள சீழ் முதலிய தீமை விலக அறுக்கின்றார். அது இம்சை யன்று; அஹிம் சையே யாகும்.

ஆகவே மனநிலையில் இது அமைகின்றது.

ஆகவே சிறுத்தொண்டர் சீராளதேவரைத் தன்னலம் பற்றாதும், தனது செயல் இன்றியும், அடியார்க்கு அமுதூட்டு தல் என்ற நியதியை வழுவாதிருக்குமாறும், சிவபோத நிலை யில் நின்றும் செய்தா ராதலின் அது கொலையன்று எனத் தெளிக.

அன்றியும் வாளால் பலரைக் கொன்றும் வென்றும் மன்னனிடம் சேனாபதியாக நின்று இவர் செய்த வீரச் செய லுக்கு தனது மைந்தனையே அவ்வாளால் அரியும்படி திருவருள் செலுத்தியது. இது அதற்கு ஒரு பரிகாரமுமாகும்.

இனி இவர் சரிதையை சிவானுபவச் செல்வராகிய அருண கிரிநாதர் திருப்புகழில் கூறுமாறும் காண்க.

"எண்டோளர் காதல்கொடு காதல்கறி யேபருகு
செங்காடு மேவிபிர காசமயில் மேலழகொ
டென்காதல் மாலைமுடி ஆறுமுக வாவமரர்-பெருமாளே"

—வங்கார.

# கற்பு

## செல்லம்மாள்

ஞானம் என்பது வெறுங் கிரியையிலும், ஆடம்பரத்திலும், அடங்குவதில்லை. ஞானமுடையவர் நீறுபூத்த நெருப்புபோல் இருப்பர். இதை விளக்குகின்றது இவ் வரலாறு.

அந்தக் குடும்பத்தில் நீண்டநாள் குழந்தையின்றிப் பிறந்ததனால் அவளுக்குச் செல்லம்மாள் என்று பெற்றோர் பேரிட்டார்கள். செல்லம்மாள் இளமையிலிருந்தே அமைதியுடனும் அடக்கமாகவும் ஒழுகி வந்தாள். அதிகம் பேசமாட்டாள். யாராவது அவளைப் பார்த்து பத்துக் கேள்விகள் கேட்டால், அவள் பொறுமையாகவும் பொருத்தமாகவும் ஒரு பதில் சொல்வாள். அவளைப் பெற்றோர் படிக்கவைக்கவில்லை. ஏழைக் குடும்பம்; வீட்டுவேலையில் அவளை ஈடுபடுத்தினார்கள். அவள் நிறம் கருப்பாக இருந்தாலும் வெள்ளையுள்ளம் படைத்தவள்.

செல்லம்மாள் மங்கைப்பருவம் அடைந்தாள்; அவள் அப்போது மரகதச் சிலைபோல் விளங்கினாள். பால்போன்ற மொழியும், சேல்போன்ற விழியும், அன்ன நடையும், மின்னலிடையும் உடையவளாய் அழகுக்கு ஒரு இருப்பிடமாய் காட்சியளித்தாள்.

அத் திருவாட்டியைத் திருத்தணிகையில் செங்கல்வராயன் என்ற திருவாளனுக்கு மணஞ்செய்துக் கொடுத்தனர். ஓராண்டுக்குள் தாயாருந் தந்தையாரும் சிவகதி சேர்ந்தார்கள். அதனால் செல்லம்மாளுக்கு தாயார் ஊராகிய திருப்பதிக்குப் போய்வரக்கூடிய தொடர்பு அடியுடன் நின்றுவிட்டது.

இளம்பருவத்திலேயே தாய் தந்தையரை இழந்த செல்லம்மாளுக்கு அத் துன்பம் பெரிய அதிர்ச்சியை யுண்டாக்கியது. அவள் மனம் வேதனையால் வெந்தது. இனி கணவ்ன் வீட்டைத் தவிர வேறு போக்கிடமில்லை.

செங்கல்வராயன் அதிகப் படிப்பில்லாதவன்; சற்று மந்தமானவன்; நல்ல அழகன்; உழைப்பாளி. செல்லம்மாளிடம் அன்புடன் நடந்துவந்தான். அவனுக்கும் தாய் தந்தையரில்லை. ஒரு தம்பிமட்டும் இருந்தான். அவன் பெயர் தணிகாசலம். அவனுக்கு வயது ஏழு. அந்தக் குடும்பத்தில் செங்கல்வராயன், செல்லம்மாள், தணிகாசலம் என்ற மூவர்தான். செங்கல்வராயனுக்கு அதிகம் சொத்து இல்லை. முன்னோர்கள் தேடி வைத்த இரண்டு ஏக்கர் நிலமும் குடியிருக்க வீடுமட்டும் இருந்தன. அவன் ஒரு பெரிய மளிகைக் கடையில் கணக்குப் பிள்ளையாக வேலைபார்த்துவந்தான். முப்பது ரூபாய் சம்பளம். நிலத்தில் விளைந்துவரும் நெல் சாப்பாட்டிற்குப் போதும். மேற்கொண்ட

செலவுக்கு சம்பளத்தின் ஊதியத்தைக் கொண்டு செட்டாகக் குடும்பத்தை நடத்தினன். தண்டவாளத்தில் ரெயில் போவது போல் இப்படியும் அப்படியும் ஒதுங்காமல் வாழ்க்கைச் சகடம் ஓடியது. அவன் வீட்டிற்கு விருந்தாளிகளாக எப்போதாவது ஒருவர் இருவர் வருவர். அதனால் அதிகம் செலவு நேரவில்லை.

செங்கல்வராயன் கார்த்திகைக்குமட்டுந்தான் மனைவியுடனும் தம்பியுடனும் மலையேறி தணிகாசலபதியை வழிபடுவான். கடையில் அடிமைத் தொழில் பூண்ட அவனுக்கு நேரம் இன்மையால் ஏனைய நாள்களில் போக இயலவில்லை. செல்லம்மாள் தன் கொழுந்தனாகிய தணிகாசலத்தை அழைத்துக்கொண்டு மாலையில் வெள்ளி—திங்கள் என்று வாரத்தில் இரண்டு நாள்கள் மலையேறி வடிவேல் முருகனை வழிபட்டுவந்தாள். படியேறும் போதும் இரங்கும் போதும் முருக நாமத்தை மனதுக்குள் மொழிந்த வண்ணமாகவே இருப்பாள். அப்படி முருகா முருகா என்று நெஞ்சில் நினைக்கும்போது அவள் உடம்பில் மின்சாரம் பாய்வது போன்ற ஒரு உணர்ச்சி ஏற்படும். சந்நிதியில் மெய்மறந்து நிற்பாள். கோயிலை வலம் வரும்போது கண்ணீர் மல்கி முருகனைத் துதித்து உருகுவாள். குக பக்தி பூண்டதோடு பதிபக்தியும் பூண்டு, கணவன் கருத்தறிந்து, குறிப்புணர்ந்து ஒழுகிவந்தாள். ஒருமுறை கூட அவள் கணவனுடன் எதிர்த்துப் பேசியதே இல்லை. அவள் கணவன் உண்டபின் உண்டும், உறங்கிய பின் உறங்கியும், விழிக்கு முன் விழித்தும் கற்பு நெறி தவறாது வாழ்ந்தாள். அவளுடைய உத்தம குணங்களையும் உயர் கற்பின் திறத்தையும் நன்கு உணர்ந்து பாராட்டக்கூடிய அறிவு அவள் கணவனிடம் இல்லை. சில சமயங்கள் அவள் மீது முனிந்து வைவான்; அடிப்பான். அப்படி அவன் முரட்டுத்தனமாக நடக்கும் போதும் அவள் மிகப் பொறுமையாகவும் நிதானமாகவும் இருப்பாள். அக்காலங்களில் முன்னையினும் பன்மடங்கு கணவனுக்குப் பணிவிடையும் உபசாரமுஞ் செய்வாள். அவளுடைய நற்குண நலங்களைக் கண்டு புகழாதாரும் மகிழாதாரும் இல்லை.

தணிகாசலம் தாயில்லாத பிள்ளை. தன் அண்ணியிடம் பிரியமாக இருந்தான். "அண்ணி! அண்ணி! என்று அன்புடன் அழைப்பான். அண்ணிக்கு அநுகூலமான ஏவல்களைச் செய்வான். பள்ளிக்கூடம் இல்லாத நாள்களில் அண்ணியின் கூடவே இருப்பான்.

செல்லம்மாளும் தன் கொழுந்தனைத் தன் பிள்ளைபோல் அன்பாக வளர்த்தாள். அவன் கேட்ட பண்டங்களை உடனே தருவாள். உணவு சமைத்ததும் முதலில் அவனைச் சாப்பிடச் செய்வாள். அவன் முகம் வாடா வண்ணம் பார்த்துக்கொள்வாள்.

ஒருநாள் கிருத்திகை. அன்று விரதத்திற்காக செங்கல்வ ராயன் அரைபடி பால் வாங்கிவைத்தான். தணிகாசலம் விளையாட்டுப் பிள்ளை; வீட்டிற்குள் பந்தை வீசி ஆடிக்கொண்டிருந்தான். அப்பந்து பட்டு பால்பாத்திரம் கவிழ்ந்துவிட்டது. அது கண்டு நடுநடுங்கினன். அண்ணியும் அண்ணனும் திட்டுவார்கள்; அடிப்பார்கள் என்று அஞ்சினன். செல்லம்மாள் ஓடிவந்து ஒரு வார்த்தை கூட பேசாமல் அந்த இடத்தைத் துடைத்துச் சுத்தஞ் செய்துவிட்டாள்.

கடைக்குப் போயிருந்த செங்கல்வராயன் வந்தான். பலகாரஞ் சாப்பிட்டான். மனைவி தண்ணீரைத் தந்தாள். பால் தரவில்லை.

“ஏண்டி! பால் எங்கே?”

“பிராணபதி! கோபிக்கவேண்டாம்; பாலைப் பத்திரமாகத்தான் வைத்தேன். காய்ச்சலாம் என்று எடுத்தேன். கையில் எண்ணெய் பட்டிருந்ததால் கை நழுவி விழுந்துவிட்டது. பால் முழுவதும் சிந்திவிட்டது. மன்னிக்கவேணும்”

உடனே அவனுக்குக் கோபம் மூண்டுவிட்டது. அவளை ஓங்கி இரண்டு அறை கொடுத்தான். “மூதேவி! உனக்கென்ன மமதை? கவனமாக எடுக்கின்றது தானே? அநியாயமாக அரைபடி பாலைப் பாழ்படுத்தினயே? உனக்குப் புத்தியிருக்கின்றதா? பணத்தின் அருமை தெரியாத அசடே” என்று வைதான். கோபத்துடன் தண்ணீரைக் குடித்துவிட்டு கடைக்குப் போய்விட்டான்.

இந்த நிகழ்ச்சி முழுவதையும் ஒருபுறம் நின்று அசையாது பார்த்துக்கொண்டு இருந்தான் தணிகாசலம். அண்ணன் பால் எங்கே என்று கேட்டபோது அவன் உயிர் துடித்தது. அண்ணி உண்மையைச் சொன்னால் அண்ணன் தன் தோலை உரித்துவிடுவான் என்று மிகவும் பயந்தான். ஆனால் அதற்கு நேர்மாருகத் தன் அண்ணி தன்னைக் காட்டிக்கொடுக்காமல் குற்றத்தைத் தன்மேல் ஏற்றிக்கொண்டு, அண்ணன் கரத்தால் அடிபட்ட அவள் கருணையை எண்ணினன். அவன் கண்களில் முத்து முத்தாய் நீர் சிந்தியது. ‘அண்ணி!’ என்று அவள் அடிமலர் மீது வீழ்ந்தான். “அண்ணி! எனக்காக நீங்கள் பொய் சொல்லி அண்ணன் கையால் அடிபட்டீரே! உமது கருணையை நினைத்தால் கல் கரையுமே! ஆ! ஆ! பெற்ற தாய்க்குக் கூட இத்தனைக் கருணை இருக்காதே. அண்ணி, எனக்காக நீங்கள் அடியுண்டீரே. உங்கள் உடம்பு வலிக்குமே? இந்தப் பாவத்திற்கு நான் ஆளானேனே? தங்களை அண்ணியாக நான் அடைவதற்கு என்ன புண்ணியஞ் செய்தேனே?” என்று கூறி அழுதான். “தம்பி! அழாதே; நீ சிறுபிள்ளை. அண்ணு கோபக்காரர். அவருடைய அடியை நீ தாங்கமாட்டாய்.

நீ குழந்தையல்லவா. அண்ணு என்னை அடித்ததனல் ஒன்றுங் குறையில்லை. வருந்தாதே'' என்று தேற்றினள்.

செல்லம்மாளுக்குத் திருமணமாகி மூன்று வருடங்கள் சென்றன. மேளதாளத்துடன் சிலர் வந்து செங்கல்வராயனை மாலைபோட்டு பல்லக்கில் ஏற்றி அழைத்துப்போவதாகச் செல்லம்மாள் கனவுகண்டாள். அக்கனவைப் பற்றிக் கணவனிடங் கூறினள். அவன் அதை அசட்டைசெய்து "போய் வேலையைப்பார்'' என்ருன். அவள் மனதில் ஒரு பயங்கரமான இருள் சூழ்ந்தது. அன்று இரவு செங்கல்வராயனுக்குக் கடுமையான காய்ச்சல் கண்டது. மறுநாள் காலை செல்லம்மாள் தனக்குத் தெரிந்த கைமுறை மருந்துகளைக் கொடுத்தாள். அன்று பூராவும் அன்ன ஆகாரமின்றிச் செங்கல்வராயன் கிடந்தான். காய்ச்சல் தணியவில்லை. செல்லம்மாள் அன்று மாலை மலையேறி முருகனை வேண்டி விபூதி கொணர்ந்து தன் கணவனுக்குப் பூசினள். "முருகா! என் கணவனைக் காப்பாற்று'' என்று மனதிற்குள் வேண்டினள்.

மூன்ருவது நாள் செங்கல்வராயனுக்கு நினைவேயில்லை. காய்ச்சல் கடும் வேகத்துடன் அவனை வாட்டியது. அவனைத் தொட்டவர் கை சுட்டது. செல்லம்மாள் மருத்துவரைக் கொணர்ந்து காட்டினள். மருத்துவர் மருந்து கடலில் கரைத்த காயம்போல் பயனற்றது. அன்று மாலை அவன் கால்மாட்டில் அமர்ந்து செல்லம்மாள் விசிறிக்கொண்டிருந்தாள். தணிகாசலம் ஒருபுறம் இருந்து படித்துக்கொண்டிருந்தான். விளக்கு ஏற்றிவைத்து செல்லம்மாள் தன் கணவன் வாயில் சிறிது பார்லியரிசிக் கஞ்சியை விட்டாள். அவன் வாய்க்குள் அது செல்லவில்லை. கடைவாயில் வழிந்தது. அவன் மிரண்டு மிரண்டு பார்த்தான். பல்லை நெறு நெறு என்று கடித்தான். மற்றும் ஒருமுறை செல்லம்மாளை கூர்மையாகப் பார்த்தான். ஏதோ சொல்ல எண்ணினன். நா அவன் வசத்தில் இல்லை. மறுபடியும் கண்களை மூடினன். கண்களை மூடிவிட்டான். விளக்கேற்றிய வீட்டில் விளக்கு அணைந்துவிட்டது.

"ஐயோ! என் துரையே! ராஜாவே! பிராணபதி! என் தலையில் கல்லைப்போட்டீரே! முருகா! முருகா! அகில உலகங்களையுங் காக்குங் கடவுளாகிய நீ என் கணவனைக் காப்பாற்றக் கூடாதா? கருணைக் கடலாகிய உனக்கு என் மீது கருணையில்லையா? அப்பனே! ஆறுமுகப் பரம்பொருளே'' என்று கதறியழுதாள். அவளுக்கு உண்டாகிய துன்பத்தை எவ்வாறு கூற முடியும். அவளுக்கு உலகமே இருண்டுவிட்டது போல் இருந்தது.

மறுநாள் செங்கல்வராயன் உடல் நெருப்புக்கு இரையாயிற்று. உறவினர் சிலர் செல்லம்மாளை எவ்வளவு தேற்றி

யும் அவள் தேறவில்லை. ஓயாது அழுதாள். பலமுறை அவளுக்கு நினைவு தப்பிவிட்டது. ஊணும் உறக்கமுமின்றி ஏங்கிக் கிடந்தாள். உயிரில்லாத உடம்புபோல் நடந்தாள். அழுது அழுது அவள் முகந் தேய்ந்துவிட்டது. கைகால் ஓய்ந்துவிட்டது. அவள் வாழ்வு சாய்ந்துவிட்டது. துன்பமாகிய தீயின் மேற் கிடந்து நெளிகின்ற நீள் புழுவைப் போல் துடித்தாள். அவள் துன்பத்தைக் கண்டு இரங்காதார் இல்லை. "முருகனையே நம்பியிருந்த இவளுக்கு இப்படி வரக்கூடாது. தெய்வங் கூடக் கைநழுவ விட்டுவிட்டது. கலியுகத்தில் கடவுள் கூட நல்லவர்களை நலியச் செய்கின்றார்" என்று கூறி குறைபட்டார்கள்.

ஒருநாள் அவள் கோயிலில் நின்று அழுதுகொண்டிருந்தாள். சடைமுடியும் உருத்திராக்கமும் திருநீறும் தரித்த ஒரு இளந் துறவி அவள் முன்னே வந்து நின்று, "அம்மா! அழாதே; மாண்ட கணவனுக்காக அழுதுகொண்டிருந்தால் உன்னுடைய ஆன்மா எப்படி கடைத்தேறும்? உன் கணவனுடைய உடம்பு முகந்துகொண்டு வந்த வினை துய்த்து முடிந்தவுடன் உடம்பு விழுந்துவிடும். வினையின் தொகுதிதான் இந்த வுடம்பு. அவரவர் வினையைத் துய்க்கும்போது தெய்வம் அதில் குறுக்கிட்டு உதவி செய்யாது. தெய்வம் பட்சபாதமில்லாதது. நடுநிலை தவறாதது. உன் கணவன் முன் செய்த வினையை அனுபவித்து முடிந்தவுடன் மாள்கின்றபோது உன் வழிபடு கடவுள் அவனுக்கு நற்கதி யளித்துவிட்டது. கணவன் மனைவி என்ற உறவு இந்த உடம்புக்குத் தானே. உன் உயிருக்கு அவன் உறவில்லை. உன் உயிர் நாயகன் இந்த முருகன். நீ துயரத்தை விடுத்து முருகனை இடையறாது சிந்தித்து வந்தித்து செல்லும் வழிக்கு உறுதியைத் தேடு. அவலமாக அழுது இந்த அரிய மானுட உடம்பை அழித்துவிடாதே. மயக்கத்தை யறுத்து மதியைத் தெளியவைத்து மயில் வாகனக் கடவுளை நினைப்பாய்" என்று தேன் போன்ற சொற்களால் தெளிவுபடக் கூறினார். செல்லம்மாள் அவர் அடிமலர் மீது வீழ்ந்து எழுந்தாள். அத் துறவி மறைந்துவிட்டார். திடீர் என்று கண் விழித்தாள். அப்போதுதான் அவளுக்கு அது கனவு என்று பட்டது. நினைவிலே நிகழ்ந்தது போல் இருந்தது அக் கனவு.

அவள் அறிவு தெளிவு பெற்றது. முருகனே வந்து தனக்குத் தேறுதல் மொழிகளைக் கூறினார் என்று உணர்ந்தாள். மனத்தைத் திடப்படுத்திக் கொண்டாள். முருகனுடைய படத்தைக் காலையும் மாலையும் மலரிட்டு பூசித்து வந்தாள். நாள்தோறும் மலையேறி மாலையில் தணிகை நாயகனை வழிபடுவாள். அவளுக்குச் சின்னஞ் சிறுவயதில் இத்துணைப் பெரிய துன்பங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வந்தன. தாயாரும், தந்தையாரும், கணவனும் மாளத் தன்னந் தனியாக நின்றாள்.

குடும்பத்தில் சொத்து ஒன்றுமில்லை. சொந்தமாக இருந்த நிலத்தில் வந்த நெல் உணவுக்கு மட்டும் போதுமானதாயிருந்தது. புளி மிளகாய் துணி முதலிய செலவுகட்கு என் செய்வாள்? வீட்டிற்குள் இட்டிலி தோசை சுட்டு தெரிந்தவர்கட்கு விற்று அதன் மூலம் வந்த சிறிய பணத்தைக் கொண்டு தன் கொழுந்தனைப் படிக்க வைத்தாள்.

வெள்ளைப் புடவையுடுத்து உருத்திராக்க மாலை தரித்து நிரம்பவும் திருநீறு பூசி தவமடந்தையாக அவள் விளங்கினாள். அவளைக் கண்டவுடன் யாருக்கும் பிழையான எண்ணம் வராது. அவளுடைய தவக்கோலம் அதற்குக் காரணம். இரவில் நெடுநேரம் தியானஞ்செய்வாள். பகலில் வீட்டுவேலை முடிந்ததும் முருகன் படத்திற்கு முன் இருந்து ஜெபஞ் செய்வாள். அவள் திருநாவுக்கரசு சுவாமிகளுடைய தமக்கையார் திலகவதியார் போல் காட்சியளித்தாள்.

அவள் முகத்தில் சிரிப்பு என்பது சிறிதும் இல்லை. அவள் நாட்டம் முற்றிலும் ஞானபண்டிதனிடமேயே நிலைத்து நின்றது. வரவர அவள் உடல் வற்றியது. மொழுமொழு என்றிருந்த உடம்பு உலர்ந்துவிட்டது. இறைவனைப் பூசிப்பதற்குப் போதிய வலிமையை வேண்டி உச்சிநேரத்தில் ஒரு சிறிது உணவே உண்பாள். இரவில் ஒன்றும் உண்பதில்லை. வெறுந்தரையில் படுத்து கோழித் தூக்கம்போல் கொஞ்சம் தூங்குவாள். சடக்கர மந்திரத்தை அவள் நாத் தழும்பேற உச்சரித்து வந்தாள். அதனால் தவவலிமை அவளுக்கு மிகுந்தது. அவள் முகத்தில் முன்னிருந்த இளமை எழில் நீங்கி தவவொளி வீசியது. காமாதி பகைவர் அவளை நெடுந் தொலைவில் கண்டவுடன் கைகூப்பித் தொழுது அப்படியே புறமுதுகு காட்டி ஓடினார்கள்.

செல்லம்மாள் தவத்தின் மிக்க நல்லம்மாளாய் விளங்கினாள். வரவர அவள் தவ வொழுக்கம் பன்மடங்கு அதிகப்பட்டது. அவள் கனவில் முனிவர்களும் தேவர்களும் அடிக்கடி வந்து காட்சி தந்தார்கள். அவள் மொழி நிறை மொழியாக நின்றது.

தணிகாசலம் தன் அண்ணியின் தன்மையை உற்றுநோக்கி அவளுடைய தவ வாழ்க்கையைப் போற்றுவான். முன்போல் அவள் தன்னிடம் சிரித்தும், குழைந்தும் பேசுதல் இன்மைக்கு வருந்துவான். அவனுக்கும் குடும்பத்தின் நெருக்கடி மனதில் நன்கு பட்டது. அதனால் அக்கறையாகப் படித்தான். ஒவ்வொரு ஆண்டிலும் மேல் வகுப்புக்கு ஏறினான். படிப்பு ஏறியதுடன் அடக்கமும் பண்பும் ஏறின. தன் அண்ணியிடம் அளவு கடந்த பக்தி வைத்திருந்தான். அவளைத் தெய்வ மடந்தையாக எண்ணி வணங்குவான். நாள்தோறும் கந்தரநுபூதி பாராயணஞ் செய்வான். அடக்கமில்லாத இடக்கர்களுடன் சேர மாட்டான்.

படிப்பு முடிந்தவுடன் அந்தவூரில் ஒரு முதலாளியிடம் ஒரு வியாபாரத்தில் கஷ்டக் கூட்டாகச் சேர்ந்து முயற்சியுடன் வியாபாரம் செய்யத் தொடங்கினான். செல்லம்மாள் முன் தான் அணிந்திருந்த நகைகளை விற்று தன் கொழுந்தனுக்குத் திருமணஞ் செய்துவைத்தாள். வீடு இப்போது புதிய மலர்ச்சி யடைந்தது. புதிய தம்பதிகள் இன்ப வாழ்வில் வாழ்ந்து மகிழ்ச்சியுற்றார்கள்.

தளர்ச்சியடைந்த செல்லம்மாள் தன் கொழுந்தன் மனைவியாகிய சுகன்யாவிடம் குடும்பத்தை ஒப்படைத்துவிட்டாள். "அம்மா! இனி வீடு நிலம் பாத்திரம் பண்டம் எல்லாம் உன்னுடையவை. எனக்கு வயது முதிர்ந்துவிட்டது. உச்சி வேளையில் ஒரு குவளைக் கஞ்சி தந்தால் போதும். சீரும் செட்டுமாகக் குடும்பத்தை நடத்து. பதியைத் தெய்வமாக எண்ணி வாழ். தண்ணீரையும் தானியத்தையும் சிந்தக்கூடாது. மாசற்ற மனத்துடன் தெய்வ சிந்தனையுடன் இரு" என்று உபதேசித்தாள்.

சுகன்யாவும் அவளிடம் பக்தியுடன் நடந்தாள். அவளை ஒரு நாளும் அலட்சியஞ் செய்யாது, மகளைப்போல் நேயத்துடன் அவளுக்குப் பணிவிடை செய்து வாழ்ந்தாள். காலையில் எழுந்து சாணந் தெளிப்பாள். வீடு முழுவதும் கூட்டி மெழுகுவாள். சிறிது கூடச் சோம்பலின்றிப் பம்பரம் போல் சுழன்று குடும்ப வேலைகளைச் செய்வாள். தன் கணவனுக்கு வேண்டிய தொண்டுகளையுங் குறைவறச் செய்வாள்.

தணிகாசலனும் சுகன்யாவும் மனம் ஒருமையுடன் பெருமையாக வாழ்ந்தார்கள். வியாபாரத்தில் திறமையடைந்த தணிகாசலம் தனியாக ஒரு கடை வைத்து வியாபாரஞ் செய்யத் தொடங்கினான். திருவருளால் வருவாய் நிரம்ப வந்தது. வருவார் போவார் அதிகப்பட்டார்கள். மரம் பழுத்தால் பறவைகளையழைப்பார் யார்? தாமே வரும். அதுபோல் கேளும் கிளையும் நிரம்பின. ஒரு சமையல்காரன். வீட்டைப் பிரித்து பெரிய வீடாகக் கட்டினான். மாடிமீது கட்டில், பீரவை, கண்ணாடி, நாற்காலி வீடு முழுவதும் நிரம்பியிருந்தன.

சுகன்யா இப்போது பட்டைத்தவிர வேறு உடுப்பதில்லை. எல்லாம் வெள்ளிப் பாத்திரங்கள். வீட்டில் எங்கும் விரிப்புக்கள். தணிகாசலத்திற்குச் சிறிதுகூட ஓய்வு இடையாது. இரவுபகலாக ஓயாத உழைப்பு. சீரும் சிறப்பும் உயர்ந்தன. எத்தனை உயர்ந்தும் அவன் தன் அண்ணியை மறந்தானில்லை. அவன் மனதில் அந்தப் பால் சிந்திய நிகழ்ச்சி பதிந்திருந்தது. அண்ணியை மனப்பூர்வமாக வணங்கிப் பெருமைபடுத்தினான். தன் உயர்வுக்குக் காரணம் தன் அண்ணியின் ஆசீர்வாதமே என்று நம்பினான்.

முந்தியெல்லாம் வாரத்திற்கு ஒருமுறை மலையேறி தணிகைநாயகனை வணங்கினன். இப்போது ஆண்டுக்கு ஒரு முறைகூட அவனால் மலையேற முடியவில்லை. செக்கில் கையெழுத்திடவே நேரமில்லை. வருமானவரி கணக்கை முடிப்பதும், சம்பளப்பட்டியல் போடுவதும், வெளிகளில் கொள்முதலுக்குப் போய் வரவும், வேறுபல அலுவல்களும் அவனுக்குத் தீராத தொல்லையைத் தந்தது. இரவு 1 மணி 2 மணிக்குத்தான் படுக்க முடிந்தது. மீண்டும் 5 மணிக்கெல்லாம் எழுந்துவிடுவான்.

அவனுடைய நிலைமையை நோக்கிச் செல்லம்மாள் வருந்தினள். ஒருநாள் அவனை அழைத்து அருகில் இருத்தினள். "தம்பி! இச் சரீரம் நிலையில்லாதது. நமது பிரயாணம் ஒவ்வொருகணமும் தெற்கு நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது. பொருள் மலைபோலக் குவிந்திருந்தாலும் அப்பொருளில் ஒரு சல்லிகூட நம் மரணயாத்திரையில் உடன் வராது. பார்முழுதும் ஒரு குடைக்கீழாண்ட பரத சக்ரவர்த்தி முதலிய மன்னர்களே மாண்டு மண்ணாய்ப் போனார்கள் என்றால் அற்ப செல்வமுடைய நாம் மாள்வதில் என்ன சந்தேகம்? பொருளுக்கு ஒரு முடிவும் கிடையாது. அது சேரச்சேர ஆசையும் பாசமும் வளர்ந்து கொண்டேபோகும். நெருப்பில் விறகைப் போடப்போட அது திருப்தியடையாது மேலும் மேலும் விறகை விரும்பும். அருள் அவ்வுலகுக்குத் துணைபுரியும். போதும் என்ற மனம் உண்டாக வேண்டும். பொருள் நாட்டத்துடன் அருள் நாட்டமும் இருக்க வேண்டும். பொருளுக்கு அழிவு உண்டு. அருளுக்கு அழிவு இல்லை. நீ என் சொற்களை உற்றுநோக்கு. உன் உய்வுக்கு உறுதி கூறுகின்றேன். ஒரு பூஜை அறையை அமைத்துக்கொள். எழுந்தவுடன் கடவுள் வழிபாட்டைச் செய்; வியாபாரத்தைச் சுருக்கு. விவேகத்தைப் பெருக்கு" என்று உபதேசித்தாள்.

தவச் செல்வியாகிய அத் தாயின் மொழி அவன் உள்ளத்தில் வேரூன்றியது. ஆன்றோர் அமுதமொழி அவலமாகாதன்றோ? "அண்ணி! தங்கள் மொழி எனக்கு வேதமொழியாகும். அவ்வண்ணமே செய்வேன்" என்றான். வியாபாரத்தை ஒரு அளவுக்கு மட்டுப்படுத்திக்கொண்டான். தக்க காரியஸ்தரிடம் பொறுப்புள்ள வேலைகளை ஒப்புவித்தான்.

வாரத்திற்கு ஒருமுறை வழுவாது மலையேறி மயிலேறும் பெருமானை வணங்கினன். தெருப்பக்கம் ஒரு அறையைப் பூசையறையாக அமைத்துக்கொண்டான். காலையில் எழுந்து நீராடுவான். நிரம்ப விபூதி பூசி பொன் கட்டிய உருத்திராக்க மாலை பூண்டு, உயர்ந்த பட்டாடையுடுத்து, வெள்ளிப் பூவேலை செய்த சந்தன மரப்பலகைமேல் அமர்ந்து பூஜை செய்வான். பூஜை சாமான்கள்யாவும் வெள்ளிதான். வெள்ளிமணி, வெள்ளி தூபக்கால், வெள்ளித் தீபத்தட்டுகள், வெள்ளிக் குடம்,

வெள்ளிக் குத்துவிளக்குகள், தங்கப் பாத்திரம் இப்படி பள பள என்று ஒளிவிடும் வெள்ளி ஏனங்கள். நெய் விளக்கு; அழகிய படங்கள்; சரிகைமாலைகள்; எல்லாம் ஒரே ஆடம்பரம். அவன் மனைவி, பட்டுப்புடவையுடுத்துத் தன் கணவன் அருகில் இருந்து பூஜைக்குரிய கருவிகரணங்களை ஆயத்தம் செய்துத் தருவாள். பஞ்சாமிர்தம் போடுவாள். நிவேதனத்திற்குக் காய்ச்சிய பால், சர்க்கரைப்பொங்கல், சாத்துக்குடி ஆரஞ்சிப் பழங்கள், ஆப்பிள், மலைவாழைப் பழங்கள், பெரிய தேங்காய்கள் இவைகளை ஒழுங்கு செய்துக் கொடுப்பாள். இப்படி நாடோறும் பூஜை நடந்தது. பாராயணமும், சகஸ்ரநாம அர்ச்சனை முதலியவைகளும் நடந்தன.

தன் வீட்டிற்கு யார்வந்தாலும் பூஜை வீட்டிற்கு அழைத்துப் போய் காட்டுவான். அவர்கள் அதைப்பார்த்து "மிகவும் நன்ருக இருக்கின்றது; தங்களைப் போன்று பூசிப்பவர் இக்காலத்தில் எங்கும் கிடையாது" என்று கூறும்போது அவனுக்கு ஒரு தனி மகிழ்ச்சி. தனக்குள் பெருமையடைவான். இப்படி சில மாதங்கள் சென்றன.

செல்லம்மாள் நடையில் ஒரு பாய்மீது எப்போதும் ஒடுங்கிய வண்ணமாக அமர்ந்திருப்பது வழக்கம். அவள் மனம் இடைவிடாது முருகன் திருவடியில் ஈடுபட்டிருக்கும். ஆனல் அவளுடைய ஆழ்ந்த பக்தியையும், அதனல் விளைந்த ஞானத்தையும் அறிவார் யார்?

ஒரு நாள் காலை ஐந்தாறு பெரிய மனிதர்கள் வந்தார்கள். அவர்கட்குச் செல்லம்மாளின் பெருமை தெரியாது. யாரோ வேலைக்காரி என்று அலட்சியமாக எண்ணினுர்கள்.

"பாட்டி! ஐயா எங்கே? உள்ளே இருக்கின்ருரா? என்ன செய்கின்ருர்?" என்று வினவினர்கள்.

"ஐயா! வீட்டு முதலாளி தன் மனைவிக்குச் செருப்பு தைத்துக் கொண்டிருக்கின்ருர்" என்று செல்லம்மாள் கூறினள்.

அவர்கள் அதைக் கேட்டுத் திடுக்கிட்டார்கள். இந்தக் கிழவிக்கு என்ன வாய் துடுக்கு. பெரியதனம் படைத்த முதலாளியா செருப்பு தைப்பார்? இக்கிழவி அவரை இவ்வாறு நிந்தனையாகக் கூறுகின்ருள்" என்று கூறி வைதார்கள்.

பூஜை வீட்டில் தணிகாசலம் பூஜை செய்துகொண்டிருந்தான். அந்த வேளை உச்சிவேளை. நல்ல வெய்யில். அவன் மனைவி சுகன்யா நைவேத்யம் கொண்டுவரப் போயிருந்தாள். பூஜைக்கு நைவேத்யம் தயாரிக்கும் இடம் தோட்டத்தில் தனியாக இருந்தது. அதற்கும் வீட்டிற்கும் இடையில் சிறிது வெளி; அதில் சிமிட்டித் தரை. கொடிய வெய்யிலினல் அத்தரை கொதித்திருந்தது.

பூசை செய்யும் தனிகாசலத்தின் மனத்தில் அந்த வெய்யிலும் கொதிக்கும் சிமிட்டித் தரையும் வந்து நின்றன. "நமது அருமையான இளம் மனைவி நைவேத்யம் எடுத்துக் கொண்டு சுடுகின்ற சிமிட்டித் தரையில் வந்தால் அவள் அடி சுடுமே? குளித்து ஆசாரமாக இருப்பதனால் செருப்பணிந்து வருவதும் முறையன்று. ஆகவே நாளைக்கு ஒரு நல்ல தையற்காரனைக் கூப்பிட்டு உயர்ந்த வெல்வெட்டு வாங்கி அழகான பட்டு நாடாக்கள் போட்டு வெல்வெட்டினாலே ஒரு செருப்பு தைத்துக் கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுத்துவிட்டால் வெய்யிலில் அவள் வேதனைப்படவேண்டிய துன்பம் இராது" என்றும், அவ்வாறு வெல்வெட்டினால் செருப்பு தைக்கத் தகுந்தமாதிரியும், என்ன நிறத்தில் தைத்தால் அழகாக இருக்குமென்றும் திட்டமிட்டுக் கொண்டிருந்தான்.

அந்த சமயந்தான் செல்லம்மாள் அந்த சொற்களைச் சொன்னாள். தன் அண்ணி கூறிய சொற்கள் அவன் காதில் விழுந்தன. "மனைவிக்குச் செருப்புதைத்துக் கொண்டிருக்கின்றார்" என்று அண்ணி கூறியதையும், அதைக் கேட்ட பெரிய மனிதர்கள் அவளை வைவதையும் கேட்டுத் திடுக்கிட்டான்.

"நாம் எண்ணிய எண்ணம் அண்ணிக்கு எவ்வாறு தெரிந்தது? ஆ! ஆ! நாம் பூஜை செய்கின்றபோது மனைவியின் அடி சுடுமே என்ற எண்ணத்தை எண்ணலாமா? உடம்பு பூஜை செய்கின்றதே யன்றி உள்ளம் பூஜை செய்யவில்லை. நமது அண்ணிக்கு எண்ணுகின்ற எண்ணங்களை யறியும் ஆற்றல் இருக்குமாயின் இவருடைய ஞானம் ஒப்பில்லாதது" என்று எண்ணினான். பூஜை விட்டு எழுந்து ஓடிவந்தான். அண்ணியின் அடிமலர் மீது அடியற்ற மரம்போல் விழ்ந்து பணிந்தான். அவன் கண்களில் நீர் மல்கியது. இந்த அதிசயத்தை வந்தவர்கள் கண்டு திகைத்து நின்றார்கள்.

"அண்ணி! அருந்தவச் செல்வி! என் மனைவியின் கால் பத்து கெஜம் தூரம் வெய்யிலில் நடப்பதற்கு வருந்தி வெல்வெட்டினால் செருப்புத் தைத்துத் தரவேண்டும் என்று அடியேன் எண்ணியதைத் தாங்கள் அறிந்து கூறி என்னை ஆட்கொண்டீர். தங்கள் கருணையே கருணை. இனி நான் மனமடங்க பூஜைசெய்வேன்" என்று கூறி வேண்டினான். பூஜை என்பது ஆடம்பரத்திலும் வெறுங் கிரியையிலும் அடங்கிவிடாது. ஆழ்ந்த அன்பிலும் ஞானத்திலும் அது அமையவேண்டும் என்பதை உணர்ந்தான்.

வந்தவர்கள் அப்போதுதான் அம்மையாரது அநுபவ ஞானத்தையும் அவளது அருமை பெருமைகளையும் அறிந்தார்கள். அத்தனைப் பேரும் செல்லம்மாள் திருவடி மீது விழ்ந்து வணங்கினார்கள்.

அன்று தொட்டு தணிகாசலம் மனத்தைத் தடுத்து உருக்கத்துடன் உள்ளன்போடு வழிபாடு செய்தான். பூஜையின் முடிவில் அண்ணியை வணங்கி அருள்பெறுவான்.

அன்று சோமவாரம். மாலை ஆறு மணி. தணிகை மலை மீது முருகன் சந்நிதியில் கர்ப்பக்கிரகத்துக்குள் செல்லம்மாள் புகுந்து சென்றதை அங்கு பூஜைசெய்யும் குருக்கள்மார் கண்டார்கள். உடனே 'இது என்ன விபரீதம்? இந்தக்கிழவி உள் நுழையலாமா?' என்று ஓடினார்கள். அங்கு அவளைக் காணப் படவில்லை.

அதே சமயம்தான் செல்லமாளின் ஆவி தணிகை நாயகனது தாள்மலரைச் சார்ந்தது. அந்த செய்தியைப் பின்னே ஊரவர் அறிந்து அவள் பெருமையை மேலும் அறிந்தார்கள். அம் மாதரசியின் திருமேனி நந்தியாற்றின் கரையில் அடக்கம் செய்யப்பட்டது.

---

## அநுபவமுறை

**நன்னாறி:** நல்ல மணமுள்ளது என்பது இதன் பொருள். ரத்தசுத்தி செய்யும் ஒப்பற்ற மூலிகை.

நன்னாறியின்வேர், இலை, கொடி, பூ என்னும் இவைகளைத் துவையல், வடகம், குழம்பு முதலிய பக்குவங்களாகச், சிறுபுளி, மிளகு, உப்பு சேர்த்துக் கடுகு நீக்கி, சமைத்துப் புசித்து வந்தால் கருமேகமும் கற்றாழை நாற்றமும் நீங்கும்.

நன்னாறிவேரை அரைத்துக் கொட்டைப்பாக்கு அளவு ஆவின்பாலில் கலந்து மூன்று நாள் உட்கொள்ள, மூலக்கொதிப்பு; எலுப்புக்காங்கை, மேகச்சூடு, மேகவெட்டை, நீர்க்கடுப்பு, மூத்திரக் கிரிச்சிரம், வரட்சியினால் காணும் இருமல் இவைகள் விலகும்.

**தூதுளை:** தூதுளைக் கீரை. ஒரு ஞான பதார்த்தம். இதனைத்தொடர்ந்து உண்டார்க்கு ஞானமுண்டாகும். பாடகர்களுக்கு இனிய சாரீரம் உண்டாகும்.

இதன் கீரை, பூ, காய் இவற்றை முறையே கறிகளாகவும் வற்றலாகவும், ஊறுகாயாகவும் செய்து நெய்யுடன் சேர்த்து ஒரு மண்டலம் புசிக்க, கண்களிலுள்ள பித்தநீர், சிவப்பு, தடிப்பு முதலிய குற்றங்கள் நீங்கி, இரவிலும் பகல்போலக் கண்களுக்கு ஒளியுண்டாகும்.

தூதுளை, திப்பிலி, முருங்கப்பட்டை, சீனி; வகைக்கு ஒரு பலம் உலர்த்தி இடித்து ஒன்றுகூட்டி நாள்தோறும் காலை 1 அல்லது 2 விராகனிடை விதம் பசுவெண்ணெயில் உட்கொள்ள, ஈளை, இருமல், காசம், க்ஷயம் முதலிய பல கப நோய்கள் நீங்கும்.